சார்பு நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்.

முன்னிலை– திருமதி.ச.சரண்யா., எம்.எல்.,

சார்பு நீதிபதி, வந்தவாசி

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02–ம் நாள் செவ்வாய்கிழமை

வழக்கிடை மனு எண்.3/2025 in அசல் வழக்கு எண்.553/2024

1. முருகன்
2. செல்வம்
3. செல்வி ......மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

/எதிர்/

ராமு ..... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 23.07.2025 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.P.கீர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.ஜீவானந்தம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்கள், மனு மற்றும் எதிர் உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்;

## உத்தரவு

இம்மனு கட்டளை XXXVII விதி 3 (V) உ.வி.மு.ச.வின் படி எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள சுருக்குமுறை விசாரணை வழக்கினை எதிர் நடத்த மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு அனுமதி அளிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 1ம் மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-**

தான் இம்மனுவில் 1ஆம் மனுதாரர் என்றும், அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி என்றும் 2ம் மனுதாரர்/2ம் பிரதிவாதி தனது மகன் என்றும், 3ம் மனுதாரர்/3ம் பிரதிவாதி தனது மகள் என்றும், எதிர்மனுதாரர்/வாதியின் தாவா சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், தாவாவில் ஒப்புக்கொள்கின்ற சங்கதிகள் தவிர்த்து மற்றவற்றை எதிர்மனுதாரர்/வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், தனது மனைவியும் 2, 3 மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் தாயார் ராணி என்பவர் எதிர்மனுதாரர்/வாதியை அணுகி 3வது எதிர்மனுதாரர்/3வது பிரதிவாதியின் திருமண செலவிற்காக 04.01.2024ம் தேதி ரூ.1,65,000/- கடனாக அளித்ததாகவும், அப்போது தனது மனைவி 04.01.2024ம் தேதி எதிர்மனுதாரர்/வாதி பெயருக்கு ஒரு புரோநோட்டு எழுதிக் கொடுத்ததாகவும், அதற்கு 24 சதவீதம் வட்டி செலுத்த ஒப்புக்கொண்டதாகவும், சொல்லியுள்ள சங்கதிகள் சரியல்ல என்றும், தனது மனைவி கடந்த 2022ம் ஆண்டில் இருந்து தன்னுடன் குடும்ப பிரச்சனை காரணமாக தன்னைவிட்டு கடந்த 2 ஆண்டுகளாக பிரிந்து தனிமையில் வசித்து வருவதாகவும், அவ்வாறு இருக்க எதிர்மனுதாரர்/வாதிக்கு தாவா புரோநோட்டு ஏற்படுத்திக்கொடுத்ததாக சொல்வது மோசடியாக உருவாக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

2.2) ஆனால் தனது மகளுக்கு கடந்த 28.10.2012ம் தேதி மோகன்ராம் என்பவருடன் திருமணம் நடைபெற்றதாகவும், கடந்த 30.05.2013ம் தேதி ஒரு பெண் குழந்தை பிறந்ததாகவும் பிறகு 07.10.2017ம் தேதி ஒரு ஆண் குழந்தை பிறந்ததாகவும், அதன்பின்பு 28.10.2012ம்

தேதியே 3ம் மனுதாரர்/3ம் பிரதிவாதிக்கு திருமணம் நடைபெற்றவிட்ட நிலையில் தாவாவில் எதிர்மனுதாரர்/வாதி தனது மகளின் திருமணத்திற்காக தனது மனைவி கடன் பெற்றதாக சொல்வது முற்றிலும் பொய்யானது என்றும், எதிர்மனுதாரர்/வாதியிடம் ரூ.1,65,000/– கடனாக பெற்ற பிறகு ராணி என்பவர் மேற்படி அசலையோ, வட்டியோ செலுத்தவில்லை என்றும், அதன் பின்னிட்டு ராணி என்பவர் இறந்துவிட்டதாகவும், அவருக்கு சட்டப்படியான வாரிசுகள் தானும் மற்ற 2, 3 மனுதாரர்கள் என்றும், அதனால் தாவா கடனை செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றும், தன்னை எதிர்மனுதாரர் / வாதி அணுகி தாவா கடனை பைசல் செய்யக்கோரியிருந்தார் என்றும் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றும், குறிப்பிட்டுள்ளார்.

2.3) எதிர்மனுதாரர்/வாதி சட்ட அறிவிப்பு ஒன்றை 18.09.2024ஆம் தேதி பிரதிவாதிகளுக்கு அளித்து அதில் ரூ.1,65,000/– மற்றும் 24 சதவீதம் வட்டி தொகை ரூ.29,700/– ஆக மொத்தம் ரூ.1,94,700/– மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பு செலவுத் தொகை ஆகியவற்றை அளிக்கக் கோரி அனுப்பிய அறிவிப்பிற்கு தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 04.10.2024ம் தேதி உரிய பதில் அறிவிப்பில் தனது மனைவி எவ்வித தொகைகளும் கடனாக பெறவில்லை என்றும், மனுதாரர்/வாதிக்கு எவ்வித புரோநோட்டும் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என்று மறுப்பு தெரிவித்து உரிய பதில் அறிவிப்பை அனுப்பியதாக சொல்லியுள்ள சங்கதிகள் சரியே என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள சுருக்குமுறை விசாரணையை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிர்கொண்டு

நடத்த மேற்படி மனுவினை அனுமதித்தது தக்க உத்தரவிட வேண்டுமாய் குறிப்பிடப்பட்டுள்ளன.

**<u>3. எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள எதிர் உரையின் சுருக்கம்:–</u>**

(3.1) எதிர்மனுதாரர் தனது எதிருரையில், தான் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக ரூ.1,98,000/–த்தை வட்டியுடன் திரும்ப செலுத்த கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும் ஆவணங்களை பெற்றுக்கொள்ளும்படி தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கதக்கதல்ல என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் மனு பத்தி 3ல் ராணி 1ஆம் மனுதாரரின் மனைவி என்றும், 2, 3 மனுதாரர்களின் தாயார் என்றும், ஆனால் அவர் எதிர்மனுதாரரிடம் 04.01.2024 அன்று ரூ.1,65,000/–த்தை 3ஆம் மனுதாரரின் திருமணத்திற்கு கடனாக பெறவில்லை என்று குறிப்பிட்டுள்ளது பொய்யான சங்கதி என்று எதிர்மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் குறிப்பிட்டுள்ளபடி ஆவணங்கள் இவ்வழக்கிற்கு சம்மந்தமில்லாதவை என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாவா தொகையை பின்வட்டியுடன் எதிர்மனுதாரர்/வாதிக்கு செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள் என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யதக்கது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**4. <u>இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கவேண்டுமா? இல்லை? என்பதே ஆகும்.</u>**

(4.1) இம்மனு கட்டளை XXXVII விதி 5 உ.வி.மு.ச.வின் படி எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள சுருக்குமுறை விசாரணை வழக்கினை எதிர் நடத்த மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு அனுமதி அளிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்களுடைய மனுவில் வழக்கில் கூறியுள்ளபடி 1ம் மனுதாரரின் மனைவியும், 2, 3 மனுதாரர்களின் தாயாருமான ராணி என்பவர் எதிர்மனுதாரர்/வாதியிடமிருந்து 04.01.2024 அன்று ரூ.1,65,000/– த்தை கடனாக பெறவில்லை என்றும் எதிர்மனுதாரர் குறிப்பிட்டுள்ளபடி ராணி என்பவர் கடனுறுதி சீட்டு எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றும், மேற்சொன்ன ராணி என்பவர் 1ம் மனுதாரரை பிரிந்து 2 ஆண்டுகளாக பெங்களூரில் தனிமையில் வசித்து வந்தார் என்றும், அவர் தாவா கிராமத்திற்கு வரவே இல்லை என்றும், மேற்சொன்ன சூழ்நிலைகளில் எதிர்மனுதாரர்/வாதி பெயரில் அவர் கடனுறுதி சீட்டினை எழுதி கொடுத்ததாக சொல்லியுள்ளது பொய்யானது என்றும், தாவா கடனுறுதிசீட்டு மோசடியாக உருவாக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் 3ஆம் மனுதாரரின் திருமண செலவிற்காக கடன் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் 3ஆம் மனுதாரருக்கு கடந்த 28.10.2012 தேதி திருமணமாகிவிட்டது என்றும், எனவே வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றும், வழக்கிற்கு வியாஜியம் மூலமே இல்லை என்றும், மேலும் வழக்கிற்கு செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணமும் தவறானது என்றும், மேற்சொன்ன சங்கதிகளை வழக்கு விசாரணையில் மட்டுமே நிரூபிக்க இயலும் என்றும் எனவே மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள சுருக்குமுறை விசாரணை வழக்கை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிர்கொண்டு நடத்த அனுமதி அளித்திடவேண்டும் என்று இம்மனுவினை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள்.

(4.2) எதிர்மனுதாரர்/வாதி தனது எதிருரையில் மனுதாரருடன் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை மறுத்துள்ளார். மேலும் 1ஆம் மனுதாரரின் மனைவி 2, 3 மனுதாரரிகளின் தாயாருமான ராணி என்பவர் எதிர்மனுதாரர்/வாதியிடமிருந்து கடந்த 04.01.2024 அன்று 3ஆம் மனுதாரரின் திருமணத்திற்கு என்று கூறிதான் ரூ.1,65,000/—த்தை கடனாக பெற்றதாகவும், மேற்சொன்ன ராணி என்பவர் தவறாக காரணத்தை கூறி கடன் பெற்றுள்ளார் என்றும், எனவே இம்மனுவின் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மேற்சொன்ன கடனை பின்வட்டியுடன் செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(4.3) இம்மனு கட்டளை XXXVII விதி 5 ன் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள சுருக்குமுறை விசாரணை வழக்கை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிர்நடத்த அனுமதி கோரி தாககல் செய்யப்பட்டுள்ளது. கட்டளை XXXVII விதி 5 உ.வி.மு.சவில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. " The defendant may, at any time within ten days from the service of such summons for judgment, by affidavit or otherwise disclosing such facts as may be deemed sufficient to entitle him to defend, apply on such summons for leave to defend such suit, and leave to defent may be granted to him unconditionally or upon such terms as may appear to the Court of Judge to be just." மேற்சொன்ன சட்டப் பிரிவின் படி சுருக்குமுறை விசாரணை வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு வழக்கை நடத்த போதுமான முகாந்திரங்கள் இருப்பதாக மனுவில் இருந்து தெரியவந்தால் அவர்களுக்கு வழக்கை எதிர்நடத்த அனுமதி அளிக்கப்பட வேண்டும். இவ்வழக்கில் 1ஆம் மனுதாரரின் மனைவி மற்றும் 2, 3 மனுதாரர்களின் தாயாரான ராணி

என்பவர் எதிர்மனுதாரர்/வாதியிடமிருந்து கடனே பெறவில்லை என்றும், அந்த கடனுக்காக குறிப்பிடப்பட்டுள்ள காரணமும் தவறானது என்று மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே ராணி என்பவர் கடன் பெற்றதாகவே மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளாத சூழ்நிலைகளிலும் தாவா கடனுறுதி சீட்டினை மோசடியாக உருவாக்கப்பட்டது என்று மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள சூழ்நிலைகளிலும், இந்த சங்கதிகள் குறித்து வழக்கு விசாரணையில் மட்டுமே முடிவு செய்ய இயலும். எனவே இவ்வழக்கில் Triable Issues உள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேற்சொன்ன சூழ்நிலைகளில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இவ்வழக்கை எதிர்நடத்த அவர்களுக்கு நீதியின் நலன் கருதி அனுமதி அளிக்க வேண்டும் என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே இம்மனுவினை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

<u>முடிவில்:–</u>

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்படுகின்றது. செலவு தொகை இல்லை

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.09.02 04:25:43 +0530

சார்பு நீதிபதி,
வந்தவாசி.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்– இல்லை

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.09.02 04:25:50 +0530

சார்பு நீதிபதி,
வந்தவாசி.